12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது</u>

# <u>குருவாணை உணர்தலும்</u>
# <u>உணர்த்தலும்</u>

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணேடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு <u>43,73,120</u> **தை** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. "குருவாணை உணர்தலும் உணர்த்தலும்" - 1984இல் பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கே உரிய 'குருதேவர்' என்ற நிலை பற்றியும், குருதேவராக இருந்து அவர்கள் வழங்கும் குருவாணைகள் பற்றியும் அனைவருக்கும் வழங்கிய விளக்கக் கட்டுரை.

2. "இருதிறத்தார் செயல் விளக்கத் திருவோலை" - 1984இல் குருதேவர் அவர்கள் சிறுமுகைப் புதூர் அடியான் ஒருவர் மூலம் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் செயல்படுபவர்களுக்கு பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகளை வழங்கிடும் விரிவான கட்டுரை.

3. "செயல்நலம் பாராட்டு ஊக்கத் திருவோலையும் ஐந்தாவது முப்பெருவிழா அறிவிப்பு ஆணையும்" - 1984இல் குருதேவர் அவர்கள் தமது 'இந்துமதத் தந்தை' என்ற அருட்பட்டம் பற்றி அனைவருக்கும் எழுதிய அஞ்சல்.

---

<u>மனு நீதி பற்றி...</u>

மனு - தமிழ்; மனு - சமசுக்கிருதம்;

மண் + அணு => மனு; மண்ணில் உள்ள அனைத்து வகையான அணுக்களுக்கும் நீதியைக் கூறியது மனு எனும் ஆதி மூலப் பதினெண்சித்தர். இந்துமதத்தின் சட்டங்களை எழுதியவர். இந்து ஆற்றங்கரையில் அருட்பா நகரில் இளமுறியாக் கண்டத்தில் நிகழ்ந்தது. இது மணீசக் காலம்.

*பொய்யான ஹிந்து* மதத்திற்கு மனு நீதி மனிதர்களுக்கு நீதி வகுத்தது. மனு என்று ஒருவரே கிடையாது. பொய், ஏமாற்று.

# குருவாணை யுணர்தலும் உணர்த்தலும்

4/2/84இல் இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் அவசர அவசியமாக அரியவாள், பரமாச்சாரியார், திருமந்திற ஓலைநாயகம் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானத்தின் மூலமாக அனைவருக்கும் விடுக்கும் **'குருவாணை யுணர்தலும் உணர்த்தலும்'** எனும் **திருவோலை**.

1) யாம், குறிப்பிட்ட சிலரைக் குறிப்பிட்ட முறைகளில் செயல்படல்; குறிப்பிட்ட வட்டாரங்களில் மட்டும் செயல்படல்; குறிப்பிட்ட காலம் தவம் செய்தல்; குறிப்பிட்ட காலம் ஓய்வெடுத்தல், விலகியிருத்தல்; ... என்று குருவாணைகள் அனுப்பிய போதெல்லாம் அதனைத் திருத்துமாறும், தளர்த்துமாறும், மாற்றுமாறும் வேண்டுகோள்கள் அனுப்பியவர்களில் தலைமைச் செயலாளரும், மாவட்ட வட்டாரத் தலைவர்களும் இருக்கிறார்கள். **இவர்கள் இனியாவது திருந்த வேண்டும்**. இல்லாவிட்டால், விளாங்குடி துரைச்சாமி, தாயுமானவர் சன்னிதானமாக இருந்த பெரி.முத்தையா, சித்தரடியார் சோ.இரவீந்திரன், பவானி அம்மன் சன்னிதானம் திருநாவுக்கரசு, திரிபுரசுந்தரி சன்னிதானம் டாக்டர் மணிசங்கர், வேங்கையம்மன் சன்னிதானம் தெ.சவகர், வீரசிங்கம்பேட்டை மாரியம்மன் சன்னிதானம் K.கலியமூர்த்தி, ... முதலியவர்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்பட்ட வரலாறு தொடரும்! தொடரும்! தொடரும்! **எச்சரிக்கை. குருவாணை**.

2) குருதேவர் நெடிய, பெரிய, அரிய பதினெண்சித்தர் பீடாதிபதியின் விந்துவழி வாரிசு; அருளுலகக் கலைகளிலும், அறிவியல்களிலும் முழுமையாகத் தேர்ந்தவர்; நூற்றுக்கணக்கான

சமாதுகளில் இருந்தும் நிறைந்தும் மறைந்தும் வெளிவந்தவர்; ஒன்பது வயதின் எல்லையிலேயே உடலை விடுத்து ஓராண்டுகால இடைவெளியில் அண்டபேரண்டங்கள் அனைத்தும் சுற்றித் திரும்பியவர்; மூன்று உலகங்களையும் பிறப்பால், ஞானத்தால், அருளால் முழுமையாக உணர்ந்தவர்; இந்த உலகத்து விடிவுக்காக இராசிவட்ட நிறைவுடையாராக, ஆத்தாள் அமளிகையாக, பராசத்தி திருவடியாக, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திரு அவதாரம் செய்திருக்கிறார்;

பதினெண்சித்தர்களின் கொள்கையான 'உலக ஆன்மநேய ஒருமைப்பாடு'; 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்'; 'அன்பு வழியில், அமைதி வழியில், அற வழியில், அருள் வழியில், மென்மை வழியில், சமாதான வழியில்... உலக ஒற்றுமையையும், அமைதியையும், மகிழ்வையும், நிறைவையும்... நிலைநாட்டல்'; 'அருளாட்சியைப் பொருளுலக இன்னல்களையும், இருள்களையும், இயலாமைகளையும், இல்லாமைகளையும், தவறுகளையும்... முழுமையாக அகற்றிடச் செயலாக்கல்'; 'அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்குதல்'; ... முதலியவைகளை நிறைவேற்றிடத் தமது பதினெட்டாண்டு பயிற்சிகளாலும், பதினெட்டாண்டு முயற்சிகளாலும் செயலாக்கும் திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்;

இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அருளுலக ஆர்வலர் கழகமும் முழுவெற்றி பெறத் தம்மை இம்மண்ணுலகின் முதல் அரசயோகியாகவும், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாகவும் உருவாக்கி மாபெரும் சாதனை புரிந்திருக்கிறார்; உலகம் முழுதுமுள்ள அருளாளர்களின் ஒத்துழைப்பையும், நம்பிக்கையையும் பெற்ற உலக அருளாட்சித் தலைவராக

விளங்குகிருர்; உலக மாபெரும் மார்க்சீயச் சிந்தனையாளரால் வளர்க்கப்பட்ட பகுத்தறிவுவாதியாக விளங்குகிருர்; இன்றைய உலக அருளாளர்களால் இந்துமதத் தந்தையாக, குருமகா சன்னிதானமாக, ஞாலகுரு சித்தர் கருவூருராக ஏற்றுக் கொள்ளப்படுகிருர்; சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் தொழில்... துறைகளின் நடவடிக்கைகளை இரண்டறக் கலந்த நிலையில் உணர்ந்து ஆக்கப்பணிகளை அருள்வழியில் ஆற்றி வருகிருர்;

உலகப் புத்தமத அமைப்புக்களில் பலவும், கபாலிகர், காளாமுகர், சாத்தர், நிர்வாணத் துறவிகள், சித்தியாளர்கள், ... முதலியோரின் அமைப்புக்களும் தங்களின் தத்துவ நாயகராக, வழித்துணையாக ஏற்றுள்ளவராகவும் இருக்கிருர்;

..... .....; என்று உணர முடியாதவர்களைக் கணிசமாகக் கொண்ட அமைப்புக்களே 1975க்குப் பிறகு உருவாகியிருக்கின்றன.

எனவேதான், குருவாணைகளை அப்படியே ஏற்று உடனுக்குடன் செயல்படுத்தும் தரம், திரம், தீரம், உரம், வீரம், ... குறைந்தவர்கள் அடிக்கடி பாதிக்கப்பட்டுச் சித்தர் நெறிக்கும், அமைப்புக்களுக்கும், நிர்வாகத்துக்கும், தலைமைக்கும் சோதனைகளை உண்டாக்குகிருர்கள். இது தவறு! தவறு! தவறு! **குருபாரம்பரியம்** மிகத் தெளிவாக.....

"தனிமனிதத் தவறுகள் தத்துவத்தின் தவறுகளாக மாட்டா";

"தனிமனிதத் தோல்விகள் தலைமையின் தோல்விகளாகக் கருதப்பட மாட்டா";

"தனிமனித வீழ்ச்சிகள் நிறுவனத்தின் வீழ்ச்சிகளாக மாட்டா";

"தனிமனிதத் தாழ்ச்சிகள் நிர்வாகத்தின் தாழ்ச்சிகளாக மாட்டா";

... ... இப்படிப்பட்ட தத்துவச் சொற்றொடர்களால் தனிமனித நோக்கும், போக்கும் தலைமையையோ! தத்துவத்தையோ!

இயக்கத்தையோ! கட்டுப்படுத்தவோ பொறுப்பாக்கவோ முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! என்று கூறுகிறது.

எனவே, <u>இனியாவது நமது அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ஆதரவாளர்கள், ஆர்வலர்கள் ... அனைவரும் குருவாணைகளை மதித்து உடனுக்குடன் அப்படியே செயலாக்கிடல் வேண்டும்</u>. அதாவது, படை வீரர்கள் தளபதியின் ஆணைகளைச் செயலாக்குவது போல..... .

3) **“இந்து மறுமலர்ச்சிப் பணி என்பது போலியானதல்ல! கேலிக்குரியதல்ல! வேலியற்ற ஒன்றல்ல! ... என்ற உணர்வு எப்போதும் இப் பணியாளர்களிடம் இருக்க வேண்டும். அதாவது, பொழுதுபோக்கு மனமோ! கூலி மனமோ! போலி மனமோ! கேலி மனமோ! காலி மனமோ! ... உள்ளவர்கள் இந்து மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபடவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! ...”** என்ற குருபாரம்பரிய வாசகம் இங்கே குறிக்கப்படுவது பொருத்தமே.

4) இதேபோல், கண்டப்பகோட்டைச் சித்தர் கருவூரர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமி அவர்கள் இ.ம.இ.யின் பணியாளர்களுக்கு;

“... இந்துமதம் எப்போது? எவரால்? எதற்கு? எங்கு? எப்படித் தோற்றுவிக்கப்பட்டது? அதன் வரலாறு இருட்டடிப்புக்கு உள்ளானது ஏன்? அதன் தத்துவம் குழப்பத்துக்கும் சிதைவுக்கும் ஆளானது ஏன்? அதன் மறுமலர்ச்சிக்குரியவை யாவை? ஏன், அவசர அவசியமாக அதன் மறுமலர்ச்சிப் பணி விரைவு படுத்தப்படுகிறது? ... என்ற வினாக்களுக்கு அநுபவப் பூர்வமாக விடை வழங்கும் பணி துவங்கியிருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் ஏழைகள் சேர்க்கப்படலும், கோழைகள் விரட்டப்படலும் வேண்டும். குழப்பவாதிகளும், திரிபுவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும்,

கூலிகளும்..... உடனுக்குடன் களை எடுக்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால், இவர்களே விரோதிகளை வலிமைப்படுத்தும் துரோகிகளாகிடுவார்கள். எச்சரிக்கை! பதினெண்சித்தர் பீடாதிபதிகள் துரோகிகளால் மனமுடைந்துதான் உலகியலை மறந்தும், துறந்தும் நிறைவு பெற்றிட்டார்கள். எனவே, உண்மையும், துணிவும், பணிவும், கனிவும், நேர்மையும், ஆர்வமும், நம்பிக்கையும், பத்தியும் உள்ளவர்களை மட்டுமே இ.ம.இ., அ.வி.தி., அ.ஆ.க., க.வ.க. ... முதலியவற்றில் ஆராய்ந்து தேர்ந்தெடுத்துச் சேர்த்திடுங்கள்...."

என்று கூறிய அறிவுரை வாசகங்களையும் இங்கே குறித்தல் பொருத்தமாகும்.

5) கி.பி.1040இல் காவிரியாற்றங்கரைக் கருவூுரர் நிலவறைக்குள் சென்றதையடுத்து; முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்திலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சியால் பெரிய அளவு உளநிலைப் பாதிப்பைப் பெற்ற கருவூர்த் தேவர் தமது குருபாரம்பரிய வாசகமாக

"... மணிசர்களுக்கும் நல்ல வல்லமை மிக்க மனம் உருவாகி மனிதர்களாக மாறிய பிறகுதான் [மண்ணின் ஈசர்கள் = மணிசர்கள் => மண்ணின் தலைவர்கள்; - நல்ல வல்லமையான மனதைப் பெற்றவன் => மனிதன் = மதமே விலங்கை மணிசனுக்கிப் பின் மனிதனுக்குகிறது.] நாற்பத்தெட்டு வகையான அருட் பட்டங்களுக்குரிய அருளாளர்களும், நாற்பத்தெட்டு வகை ஆச்சாரியார்களும், நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்களும், நாற்பத்தெட்டு வகையான அருட்கலைகளும், நாற்பத்தெட்டு நூல்களும், நாற்பத்தெட்டுச் சாத்திற சாத்திர சாத்தரங்களும் ... படைக்கப்பட்டன. இருந்தும், விசயாலயனும், கரிகாலனும், முதலாம் இராசராசனும் ... தோன்றி விட்டார்கள்;

**திருவிசைப்பாப் பாடுமளவு தேர்ந்தவர்கள் கூடத் தாங்கள் '*குருவழி வாரிசுதான்*' என்று உணராமல் 'ஏந்தரீக, மாந்தரீக, தாந்தரீகப் பூசைகளை'ச் செய்திட்டனர். இது குரங்கு கைப் பூமாலை போல் சித்தர்நெறி சிதைய வழி செய்து விட்டது**. அதாவது, தங்களிடம் வருபவர்களின் உள நிலை, சிந்தை நிலை, உணர்வு நிலை, எண்ண நிலை, கருத்து நிலை, செயல் நிலை, உடல் நிலை, நம்பிக்கை நிலை, அருளை வாங்கிக் கொள்ளும் பக்குவ நிலை, பூசையின் மரபுகளை மறையாகக் காக்கும் உறுதி நிலை, குருவிடம் பக்குவமான பற்று முதிர்ந்த நிலை, ... முதலியவைகளை ஆராயாமல் அருள்வழங்கு பூசைகளைச் செய்வதால் மக்கள் கூச்சத்தாலும், அச்சத்தாலும், மாச்சரியத்தாலும், ... சித்தர் நெறியைத் தவறாகக் கருத நேரிடுகிறது. எனவே, துரோகிகள் பெருகி இந்துமத விரோதிகளை வலுப்படுத்தி விட்டனர்.

'எல்லோரையும் அருட்பட்டத்தாராக்க முடியாது';

'எல்லோருக்கும் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்க முடியாது';

'எல்லோரும் தங்களைப் பீடாதிபதியாக நினைத்து அனைவருக்கும் தொட்டு அருள்வழங்கும் பூசைகளைச் செய்யக் கூடாது';

'முரட்டுத் தத்துவவாதியும், வறட்டு வேதாந்தியும் பித்துப் பிடித்தவர்களைப் போல் ஏதும் கற்றுக் கொள்ளத் தரமற்றவர்களே';

'பெண் பித்தனும், பேராசைக்காரனும், புகழ்வெறியனும், குறுக்குவழிக் காரனும், கோணல் சிந்தைக்காரனும், குருமொழி கேளாது அருள்வழிகளைப் பழிக்கும் அழிவுக்குமே ஆளாக்கிடுவர்';

'உழறுவாயனும், உதறுகையனும், ஊமைத் தோற்றத்தானும், போலிக் கோழையும், கூலிக் கும்பிட்டுக்காரனும் துரோகியாகி விரோதியாவான்கள்';

‘அனைத்தையும் குருவழிக் கண்டு செயலாக்குபவனே அருள்வழியில் சிறப்பான்’; ...

# ‘அறுபத்துநான்கு ஆண்டு அநுபவமே குருவைத் தெரிய, அறிய, புரிய, உணர, நம்ப, ஏற்க, ஒப்பச் செய்யுமாதலால் எல்லோரும் தங்களைத் தாயாக, தாரமாக, தானீன்ற மகளாகக் குருவோடு நினைத்துத் திருவைக் கருவாக்கிக் கொள்ள முடியும்’; [# எனவே, சித்தர் நெறி குருவை முப்பெருநிலையில் அனைவரும் ஏற்குமாறு வற்புறுத்தவில்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!...]

‘பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம்பெண் ... எனும் ஏழு பருவப் பெண்களை முறையாகப் பூசைக்குரிய பெண்களாக்கிப் பூசைசெய்து அருட்சத்தி, சித்தி, முத்தி பெறுவதே அருளாளன் வாழ்வின் ஏழு பருவங்கள். இது அனைவருக்கும் உரியதல்ல’;

‘ஏழு பருவங்களையும் கடந்த அருளாளனே ஏழு பருவப் பெண்களையும் ஒன்றுக நிறுத்திக் ‘$ கன்னிமார் எழுவர் பூசை’ [$ ஏழு கன்னிமார் பூசை] செய்ய முடியும்’;

‘பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், விந்துவழி வாரிசுச் சித்தர்களுமே மகளிர்களில் *வாலை, கன்னி, குமரி* என்ற மூன்று வகையினரைக் கண்டுபிடிக்க முடியும். அதனுல் அவர்களே ‘ஏந்தரீகப் பூசை’, ‘தாந்தரீகப் பூசை’, ‘மாந்தரீகப் பூசை’ மூன்றையும் நிறைவு செய்ய முடியும்’;

‘மோகினி வசியத்தில் மோகினியின் பேரழகால் பித்துப் பிடித்தலைந்து அழிபவர் போல் தாந்தரீகப் பூசையை முறையாகவும், நிறைவாகவும் செய்யாதவர்கள் அழிவார்கள்’;

‘சித்தர்நெறி மிக எளிதிலும் விரைவிலும் சித்திகளைத் தரும். அதனுல் அருள்வழங்குபவர் மிகவும் கட்டுப்பாட்டோடு சட்டதிட்டங்களின் படி குருவாணை வழி நின்று செயல்படுதல்

வேண்டும். இல்லையேல் அளப்பரிய தொல்லை, தீராத நோய், அகலாத பழி, பேரழிவு … முதலியவை வந்தெய்தும்’;

‘அருட்பணியாற்றுபவர் அடக்க ஒடுக்க நடுக்கமின்றிச் செயல்பட்டால் விரைவில் நலிவும், பழியும், அழிவுமடைவர்’;

‘குருவுக்குள் திரு இருப்பதை அறிந்து தனக்குள் குருவை நிறுத்துபவனே இருளகற்றும் அருளாளன்’;

‘சித்தர்நெறிப் பூசை மரபுகள் யார்மீதும் [திணிக்கப் படுவதில்லை] வலுக்கட்டாயமாக ஏற்றி வைக்கப்படவில்லை. அவரவர் விருப்பப்படிப் பூசைசெய்யும் உரிமை மிக்க நெறியே சித்தர் நெறி’;

‘குருவை விழியாகக் கொண்டு செயல்படாதவர்கள் தங்கள் பிழையால் அழிந்ததால் தமிழின விரோதிகள் இந்துமதத்தைப் பழித்தழிக்க வழி பிறந்தது’;

‘தனிமனிதச் சூழ்ச்சிகளால் இந்துமதம் அவ்வப்போது வீழ்ச்சிகளைப் பெற்ருலும் தத்துவ மாட்சியாலும், சித்தாந்தச் செழுச்சியாலும், நெறிமுறைகளின் வளத்தாலும் விரைந்து எழுச்சி பெற்று, மீட்சியுற்று, ஆட்சி பெற்றே வருகிறது’; …

‘அருளாளர் படையால் அமைந்த அருட்பேரரசன் இராசராச சோழன் தற்கொலை செய்து கொண்டதும்; பதிஞேராவது பதினெண்சித்தர் பீடாதிபதியால் உருவாக்கப்பட்ட அருளாளர்கள் குருவழி நில்லாததால் அனைத்தும் இழந்து அழிந்ததும்….. தமிழினத்தை நிலையாகக் கட்டிக் காக்கத் தீட்டிய திட்டங்களைச் சிதையச் செய்து விட்டன. **அரசியல் வெற்றி வெற்றியேயல்ல; சமுதாய வெற்றிதான் வெற்றி.** தமிழன் மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் இல்லாததால் கூலியாய், போலியாய், ஏமாளியாய், … தளபதியில்லாப் படையாய்ச் சிதைவான்…..;”

... ... என்று எழுதியுள்ளவைகளை இந்தக் ‘குருவாணை யுணர்தலும் உணர்த்தலும்’ என்கிற அஞ்சலில் குறிப்பதன் மூலம் இன்றுள்ள பல பிறச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும், ஐயங்களுக்கும், மயக்கங்களுக்கும், தயக்கங்களுக்கும் ... விளக்கம் கூறுகிறோம்.

**- ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

6) அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் செயல்படும் அருளாளர்கள் நாவடக்கத்துடன் பொறுமையாகவும், பொறுப்பாகவும் செயல்படல் வேண்டும். மந்திரவாதிகளும், சூனியக்காரர்களும், தவறான சித்தியாளர்களும், தன்னலவெறி பிடித்த அருளுலகச் சித்து விளையாடல்காரர்களும் ..... வழிபடு நிலையில் உள்ள * கடவுள்களை, தெய்வங்களை, தேவதைகளை, ... [* 48 வகையினர்....] ஒரு குறிப்பிட்ட நிலையில் செயல்படுமாறு அல்லது வேறு இடங்களுக்குச் சென்று செயல்படுமாறோ! அல்லது செயல்படாமலேயே இருக்குமாறோ! **கட்டிவிடுகிறார்கள்**. இதனால், இந்துமதத்துக்குப் பெரிய பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இப்படிக் கட்டப்பட்டவைகளை அவிழ்த்துவிடும் பணியைத்தான் இ.ம.இ., அ.வி.தி., க.வ.க., அ.ஆ.க.;... முதலியவைகள் செய்கின்றன. ஆனால், நாத்திகர்களும், இந்துமத விரோதிகளும், சித்தர் நெறியாளர்களின் நற்பணிகளைத் தவறாக விளம்பரம் செய்கின்றனர். இது வருந்தத் தக்கது; கண்டிக்கத் தக்கது.

சித்தர்கள்தான் இந்துமதத்தைத் தோற்றுவித்தார்கள்; இவர்களே பொதுவாகக் கோவில் என்று சொல்லும் நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்களையும் கட்டினார்கள், கட்டுகிறார்கள். இவர்களே, மனிதன் படிப்படியாகக் கடவுளாகும் வழிவகைகளையும், நெறிமுறைகளையும் வகுத்தவர்கள். எனவே, இவர்களின் வழி வரும் அருளாளர்கள் எந்தக் கடவுளையும் கட்டமாட்டார்கள்; எந்தக் கோயிலையும் சத்தி இழக்கச் செய்யமாட்டார்கள்! செய்யமாட்டார்கள்! செய்யமாட்டார்கள்! செய்யவே மாட்டார்கள்! ..... என்ற

இப்பேருண்மையின் விளக்கமாகவே நம்மவர்கள் பொறுப்பாக அடக்கமாகச் செயல்பட வேண்டும்.

7) அ.வி.தி.யின் தலைமைப் பொறுப்பாளரான பிறம்மாச்சாரியாரும்; அ.வி.தி.யின் தலைமைச் செயலாளரான பரமாச்சாரியாரும் 7/2/84இல் விடுக்கப்படும் இந்தக் குருவாணையின்படிக் குருவாணையை மீறுபவர்களே உடனே இயக்க நடவடிக்கைகளிலிருந்து குறைந்தது 48 நாட்கள் விலகியிருந்து தனிமைத் தவத்திலும், கலசப் பூசையிலும் ஈடுபட்டுத் தங்களின் தவறுக்குப் பரிகாரம் செய்து திருக்கள், தாத்தாக்கள் ஆத்தாக்கள், உலக அருளாளர்கள், குருதேவர் தலைவர் ஞானத்தந்தை இந்துமதத் தந்தை குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் முதலியோரிடமிருந்து மன்னிப்பைப் பெற வேண்டும். ஈவு இரக்கமின்றி, நடுநிலையில் நின்று யாராக இருந்தாலும் உடனே இந்தப் **பரிகாரத் தண்டனையை** அறிவிப்புச் செய்ய வேண்டும். - **குருவாணை** 7/2/84.

(i) சன்னிதான உடையின்றிச் சுற்றுப்பயணமோ, அருட்பணியோ செய்தல் (அருள்வழங்கு பூசைகள்);

(ii) தனிமனிதராகத் தனிநபர் வீடுகளுக்குச் செல்லல்;

(iii) தடுக்கப்பட்டுவிட்ட ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகப் பூசைகளைச் செய்தல்;

(iv) அவரவர்க்கு உரிய பணியான அருட்கணிப்பு, அருள்வாக்கு, ஞானக்காட்சி, அருளூறு பூசனைப் பொருள் வழங்கல், யாகம் செய்தல், கொள்கை விளக்கமளித்தல், அமைப்புக்களை உருவாக்கல், ... முதலிய பணிகளில் அவரவர்க்கு உரியதை விடுத்து வேறு ஒன்றைச் செய்தல்; [வேறு எதைச் செய்தாலும் குற்றமே.]

(v) மயில்பீலியின்றிப் பிறரைக் கையால் தொட்டு அருள்வழங்குதல். [இது மாபெரும் தவறு, கண்டிப்புக்கும் தண்டிப்புக்கும் உரியது.]

8) <u>**குருவாணை** என்பதன் விளக்கம்</u>.

நம்மவர்கள் யாம், எமது கருத்துக்களைக் கூறக் கூச்சமோ, தயக்கமோ, மயக்கமோ, ... அடையும் போதெல்லாம், "<u>அதனைக் குருவாணை</u>" என்று அறிவிப்பதாக நினைக்கிறார்கள். இது முழுமையான தவறு. இது போன்ற நினைவோட்டமே நம்மிடையில் இருக்கக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! ஏனெனில், யாம் சகதிக்குள்ளிருக்கும் புழுவாக, மலைமுகட்டுத் தேன்கூட்டுத் தேனீயாக, கோபுரத்துக் கிளியாக, அடர்காட்டு வேங்கையாக, மலைச்சாரல் களிறாக, இல்லத்துப் பசுவாக, மாடப் புறாவாக, சோலைக் குயிலாக, சாலையோரத்துப் பசிப்பிணியாளனாக, மலைமுகட்டுத் தவசியாக, தத்துவச் சித்தாந்த வேதாகம வித்தகராக, போர்த் தளபதியாக, சிறந்த கப்பலோட்டியாக, ... எல்லா நிலைகளிலும் தோய்ந்து ஆய்ந்து உணர்ந்து தெளிந்தவரேயாவோம்.

எனவே, முதலாவதாக மொழி இனம் நாடு எனும் முக்கோட்டை விடுதலையும், தன்னாட்சியும், உரிமை ஆட்சியும் பெறுவதற்காகவும்; இரண்டாவதாக அனைத்து மக்களும் இயற்கையின் விளைச்சல்களையும், மனிதனின் சாதனைகளையும் சமமாகப் பகிர்ந்து கொள்ளவும்; மூன்றாவதாக யாரும் யாரையும் எதன் பெயராலும் எதன் துணையாலும் அடிமைப்படுத்தாமலிருக்கவும் ... முழுமூச்சாகப் போராட எல்லாவிதத் தரங்களையும், திறங்களையும், தீரங்களையும், பயிற்சிகளையும் ... பெற்றுச் <u>**செயல்நிலையில் உள்ள சிலரில் யாமும் ஒருவரே**</u> என்பதை நம்மவர்கள் உணர வேண்டும். அப்பொழுதுதான் **எமது ஆணைகள் வேறு!; குருவாணைகள் வேறு!** -என்ற பேருண்மை புரிந்திடும்.

மேலும், யாம், <u>**'ஒரே ஒருவர் தயாரானால் கூடப் போதும்; அவர் செயல்வீரச் சிங்கமாக இருந்தால் போதும்'**</u> என்ற கொள்கைப்படிதான் செயல்படுகிறோம் என்பதை அனைவரும் அவசியம் <u>உணர்ந்தும் உணர்த்தியும் செயல்பட வேண்டும்</u>.

9) ‘குருவாணை’ என்ற சொல்லின் விளக்கம் ‘குருபாரம்பரியம்’தான் என்று எளிதில் கூறிவிடலாம்; ஆனால், எதையும், எண்ணிக்கையிட்டுக் கூறியும்; தனித்தனிப் பிரிவுகளாகப் பிரித்தும்; விஞ்ஞான நோக்கிலும், பகுத்தறிவுப் போக்கிலுமாகச் செயல்படும் பதினெண்சித்தர் பாரம்பரியத்தின் நிறுவனமாக விளங்கும் பதினெண்சித்தர் பீடத்தின் பன்னிரண்டாவது பீடாதிபதி என்ற முறையில் ‘குருவாணை’ என்ற சொல்லுக்கு விளக்கம் கூறுகிறோம்; பொறுமையாகவும், பொறுப்பாகவும் உணர்ந்து பிறருக்கு உணர்த்துக.

<u>இந்துமதத்துக்காக நாற்பத்தெட்டுப் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் நாற்பத்து மூன்று இலட்சம் ஆண்டு பரந்த காலவெளியில் தோன்றுவார்கள். இவர்களே, காலவேகத்தாலும், கருத்து மாற்றங்களாலும், மானுடக் கற்பனைகளாலும், பிற தவறுகளாலும் இந்துமதத்துக்கு ஏற்படக் கூடிய எல்லாக் குறைகளையும், கறைகளையும், தேக்கங்களையும், மயக்கங்களையும், தளர்ச்சிகளையும், அயர்ச்சிகளையும் ... அகற்றுவார்கள்</u>.

அதாவது, அருளை அநுபவப்பொருளாக வழங்குவார்கள். மனிதர்களில் 48 வகையான அருளாளர்களை உருவாக்குவார்கள்; மனிதனை 48 வகையான வழிபாட்டு நிலையினருக்கும் அறிமுகப் படுத்துவார்கள்; 48 வகையான ஆச்சாரியார்களை உண்டாக்குவார்கள்; 48 வகையான வழிபாட்டு நிலையங்களை உண்டாக்குவார்கள்; 48 வகையான அருட்கலைகளை வழங்குவார்கள்; விண்ணிலுள்ள ஒன்பது கோள்களும், பன்னிரண்டு இராசிகளும், இருபத்தேழு மீன்களும் ஆகிய நாற்பத்தெட்டும் நிகழ்த்தும் ஆட்சியைக் கட்டுப்படுத்திடும் பரிகாரங்களைச் செய்வார்கள்; ‘விண்ணையும் மண்ணையும் இணைப்பார்கள்’; ... **இப்படிப்பட்ட பீடாதிபதிகளே குருவாணை இடுவார்கள்**.

**குரு + ஆணை => குருவாணை.**

குருவாக இருப்பவர்கள் பாரம்பரியமாக இருக்கும் ஏட்டுலகக் கருத்துக்களின் அடிப்படையில் செய்யவிருக்கும் திருத்தங்களுக்காக விடுக்கப்படும் ஆணையே குருவாணை.

**குருபாரம்பரியம்:-**

1. கருவாக்கு, 2. கருவாசகம், 3. குருவாக்கு,
4. குருவாசகம், 5. தருவாக்கு, 6. தருவாசகம்,
7. திருவாக்கு, 8. திருவாசகம், 9. அருள்வாக்கு,
10. அருள்வாசகம், 11. மருள்வாக்கு, 12. மருள்வாசகம்,

[இவை பன்னிரண்டும் அருளுலக ஆட்சிபுரியும் "**இராசிகள் பன்னிரண்டு**" எனப்படுபவை.]

13. சுருதிகள், 14. சூத்திறம், 15. சூத்திரம்,
16. சூத்தரம், 17. பூசாவிதிகள், 18. குருமார் ஒழுக்கம் #

(# சில ஏடுகளில் 'குருமார் ஒழுகலாறு' என்று பாடவேறுபாடு உள்ளது)

[இவை ஆறும் 'வேதாகம அங்கங்கள்' எனப்படுபவை.]

இந்துமதம் இப்பதினெட்டையே உள்ளீடாகவும், அடிப்படையாகவும் கொண்டு அமைந்திருக்கிறது. எனவே, இப்பதினெட்டும் பதினெண்சித்தர்களின் வாழ்வியலாக, செயல் வடிவமாக, தத்துவ முடிவாக, சித்தாந்த விளக்கமாக, வேதாந்தக் குறிக்கோளாக ... இருக்கின்றன. இவற்றின் இயக்கமாகவே ஞாலகுரு, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி இன்று செயல்படுகிறார் என்பதைப் புரிந்து செயல்பட்டால்தான் அனைவராலும் குருவாணையை உணர்தலும், உணர்த்தலும் முடியும்.

10) <u>உலகெங்கும் குருவாணையை உணர்தலும், உணர்த்தலும் நிகழ வேண்டும்</u> என்பதாலும்; அருளாட்சிப் பணிக்காக 'இந்துமதத் தந்தையாக', 'குருமகா சன்னிதானமாக', 'ஞாலகுரு சித்தர் கருவூறாராக' அனைத்துத் திருக்களும், தாத்தாக்களும், ஆத்தாக்களும், உலக அருளாளர்களும் அறிவிப்புச் செய்து ஏற்றுக்கொண்ட அருளாட்சித் தலைவராகச் செயல்படுவதாலும்; ...

யாம் மீண்டும் உலகெங்கும் 'ஏமகோடி', 'காமகோடி', 'சோமகோடி', 'வாமகோடி' எனும் நான்கு வகைப் பீடாதிபதிகளையும்; ஆன்மீக உலகத் தீமைகளோடு போராட 'அரியவாள்', 'கூரியவாள்', 'சீரியவாள்', 'பெரியவாள்' எனும் நான்குவகை அருட்சேனைத் தளபதிகளையும்; பூசைக்குரிய 'திருவறை', 'குருவறை', 'கருவறை', 'வெருவறை' எனும் நான்கையும்; பூசை செய்ய 'ஈசுவராச்சாரியார்', 'மகேசுவராச்சாரியார்', 'அனுதிசத்திகள் ஆச்சாரியார்', 'ஆதிசத்திகள் ஆச்சாரியார்', 'அப்பனுச்சாரியார்', 'அம்மையாச்சாரியார்', 'தாத்தாச்சாரியார்', 'ஆயாச்சாரியார்', 'ஆத்தாச்சாரியார்', 'சிவாச்சாரியார்', 'பிறம்மாச்சாரியார்', 'திருமாலாச்சாரியார்', 'இந்திராச்சாரியார்', 'எமனுச்சாரியார்', 'எல்லாச்சாரியார்' ['அல்லாச்சாரியார்' என்ற பாட வேறுபாடு உண்டு], 'இறையாச்சாரியார்', 'கடவுளாச்சாரியார்', 'தெய்வீகாச்சாரியார்', 'ஆண்டவனுச்சாரியார்', 'பட்டவராச்சாரியார்', 'தேவியாச்சாரியார்', 'தேவனுச்சாரியார்', 'பரமாச்சாரியார்' ['பரம்பொருளாச்சாரியார்' என்ற பாட வேறுபாடு உண்டு.], 'இருடியாச்சாரியார்' ... எனப்படும் 48 வகை ஆச்சாரியார்களையும்;..... உருவாக்கும் பணியைத் தொடங்கி விட்டோம்.

எனவே, இந்த அருட்பட்டங்களை உணர்தலும், உணர்த்துதலும் முறையாக நடத்தல் வேண்டும். அதற்குக் குருவாணையை நிறைவாக உணர்தலும், உணர்த்துதலும் நிகழ வேண்டும்! நிகழ வேண்டும்!

நிகழ வேண்டும்! எனவே, இனிமேல், குருவிடம் அறிமுகப்படுத்தப் படுபவர்களும், அருட்பட்டம் பெறப் பரிந்துரைக்கப் படுபவர்களும், அருள்வழங்கிடப் பரிந்துரைக்கப் படுபவர்களும் முன்பே நன்கு சோதிக்கப்பட்டும்; கருத்துக்களையும், செயல்களையும் புரிந்து ஏற்கும் பக்குவம் உருவாக்கப்பட்டுமே அழைத்து வரப்படல் வேண்டும்.

மேலும், வருபவர் இ.ம.இ., அ.வி.தி., அ.ஆ.க., க.வ.க. ... முதலிய அமைப்புக்களில் எதற்குரியவர் என்பது முடிவுகட்டடப்பட்டு அதற்கேற்பப் பகல், இரவு, பூசைநேரம்..... முதலியவைகளைத் தேர்ந்தெடுத்தே குருவிடம் எவரையும் அறிமுகப்படுத்த வேண்டும்.

ஏனெனில், பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான் 1. அறிவுரை, 2. அருளுரை, 3. அறிவார்ந்த அருளுரை, 4. அருளார்ந்த அறிவுரை என்ற நான்கினைத் தெளிவாக மக்களுக்கு வழங்குகிறார்கள். இதனால், எல்லா நாட்டினரும், இனத்தவரும், மொழியினரும் ... தங்கள் தங்களின் முன்னோர்களோடு தொடர்பு கொண்டு அருளுலகப் பயன்களை அடையலாம்.

**“சித்தர்நெறி எனும் இந்துமதம் முன்னோர்களின் வழிபாட்டையே கூறுகிறது”.** [The Siddharism namely Induism preaches only the Ancestors’ Worships]. எல்லா மொழிகளுக்கும் தமிழ்மொழியே தாய் என்பதால் தமிழ் மந்திறங்களை [Sacred Verses = பொதுவான அருள்வாசகங்கள்] எல்லா மொழிகளிலும் சொல்லிச் சித்தி பெற முடியும்.

இம்மண்ணுலகில் தோன்றும் அருளாளர்கள் அனைவரும் சித்தர்நெறி எனும் கனிமலர்த் தோட்டத்தில் கனிந்தவர்களே! பூத்தவர்களே! ஆதலால் எல்லா அருளாளர்களையும் வணங்கலாம்! வாழ்த்தலாம்! வழிபடலாம்! தொழுகை செய்யலாம்! கும்பிடலாம்! பூசை செய்யலாம்! ... ...

பதினெண்சித்தர்களின் கொள்கையும், குறிக்கோளுமான 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைப்போம்! வாரீர்! வாரீர்! வாரீர்! இதற்காகவே குருவாணையை உணர்தலும், உணர்த்துதலும் (16) பதினாறு பக்க அஞ்சலில் விளக்கப்படுகிறது.

ஓம் திருச்சிற்றம்பலம்.

**இந்துமதத் தந்தை,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**
10/2/84.

## பத்துக் குருவாணைகள்.

**//உண்மை நகல்//**

**<u>நகலெடுத்தவர்:-</u>**

அருள்மிகு தில்லைப்பொன்மன்றில் ஆடுகின்ற
கூத்தர்ப் பெருமான் சன்னிதானம்,
ஆதிபராசத்தி ஆதீனம்,
குருவாணை அஞ்சல் ஓலைநாயகம்,
சித்தரடியார் ஏ.இரவி.
11/2/84.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>இருதிறத்தார் செயல் விளக்கத் திருவோலை</u>

பகுதி எண் 1, அஞ்சல் எண் 1, நகல் எண் 2.

31.1.1984.

31-1-84இல் இந்துமதத் தந்தை, ஞாலகுரு சித்தர் கருவூரூர் அவர்கள் அவசர அவசியமாக கோவை, பெரியார் மாவட்ட இ.ம.இ., அ.வி.தி. கொள்கைபரப்புச் செயலாளரும், சித்தர்நெறி வளர்ச்சிப் பொறுப்பாளருமான அருள்மிகு திருவாலங்காட்டு கருமாரியம்மன் சன்னிதானம் அவர்கள் சமூகத்திற்கு (சிறுமுகை புதூர், கோவை மாவட்டம்) விடுக்கும் <u>**இருதிறத்தார் செயல் விளக்கத் திருவோலை**</u>.

(1) நம்மிடையே உண்மையான, நெருக்கமான, இடையீடு இல்லாத தொடர்புகள் இருந்து கொண்டேயிருக்க வேண்டும். அதுதான் செயல் தரத்தையும், திரத்தையும், தீரத்தையும், உரத்தையும், வீரத்தையும், கட்டுக்கோப்பையும், ஒழுங்கையும் வளர்த்திடும். இப்படி "<u>தனிமனித உறவுநிலைகள்</u> விழிப்புணர்வோடும், பொறுப்புணர்வோடும் என்றென்றும் இருந்திட்டால்தான் நமது <u>நிறுவனக் கட்டமைப்புகளும், நிர்வாக ஒழுங்கமைப்புகளும்</u> கூர்மையாகவும், நேர்மையாகவும் இருந்திடும். இதுநாள் வரை தங்களுக்கும் திரு சிதம்பரம் அவர்களுக்கும் நகலெடுக்குமாறு அனுப்பியவற்றிற்கு <u>பெரும்பாலும்</u> நகல்கள் வரவே இல்லை.

<u>இதற்காக வருந்துகிறோம். கண்டிக்கிறோம். திருந்துக. பிறரையும் திருத்துக.</u>

(2) குருதேவரைப் பற்றியோ, சித்தர் நெறியைப் பற்றியோ கற்பனைகளையும், கனவுகளையும் வளர்த்துக் கொள்ளக் கூடாது. எனவே தெரிந்ததை மட்டும் கூறுங்கள். தெரியாததைக் கேட்டு விளக்கம் பெற்றுக் கூறுங்கள். நம் அருட்பணியால் பொருளுலக நலிவுகளும், மெலிவுகளும், தேக்கங்களும், ஏக்கங்களும், ஏமாற்றங்களும், சீற்றங்களும், இழிவுகளும், பழிகளும், சுரண்டல்களும், கொள்ளைகளும், துரோகங்களும், விரோதங்களும், தீய சத்திகளின் கடுமைகளும், கொடுமைகளும், மந்திரவாதிகளின் பாதிப்புகளும், கோள் மீன் இராசி முதலியவற்றின் சோதனைகளும், ... முறையாகவும், படிப்படியாகவும், நிறைவாகவும் அகற்றப் பட்டே தீரும். இதற்குச் சான்றாக சிறுமுகை சிதம்பரம் அவர்களின் மகன் இரவிக்குமாரின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

(3) எம்மை வரவேற்பதென்றால் பெரும் பொருள் செலவு ஆகிறதென்பதால் அ.வி.தி.யின் தலைமைச் செயலாளர் நெ.சேவுகன் அவர்கள், இ.ம.இ.யின் தலைமைப் பொறுப்பில் உள்ள செயலாளர்கள் நந்தகுமார், சத்தியமூர்த்தி, சத்திவேல், பொன்னுசாமி, சண்முகம், சுப்பிரமணியன், இரவி, இரவீந்திரன், அ.வி.தி. இ.ம.இ. தலைமைப் பொறுப்பாளர் கவிக்குமார், .... முதலியவர்களில் சிலரையாவது உடனே வரவழைத்து; தங்கள் வட்டாரத்தில் அ.வி.தி. நிலையங்களையும், இ.ம.இ. கிளை அலுவலகங்களையும் துவக்குங்கள். பிப்ரவரி 15ஆம் தேதிக்கு மேல் உங்கள் வசதி போல் சனி, ஞாயிறுகளில் அருட்பயணத்தை திட்டமிட்டு அறிவியுங்கள். நாம் அருளை அநுபவப் பொருளாக வழங்கித்தான் நம்மை அறிமுகம் செய்து வளர்க்க வேண்டும். இல்லாவிட்டால்,

மக்கள் நம்மை நாட்டிலுள்ள காலிகளோடும், கூலிகளோடும், போலிகளோடும், தன்னல வெறியர்களோடும் சேர்த்தே எண்ணிட நேரிட்டு விடும். இதனை ஆரம்பக் கட்டத்திலேயே தவிர்த்திடல் வேண்டும். எச்சரிக்கை! குருவாணை.

(4) நம்மவர்கள் எழுதுகின்ற கட்டுரைகளும், சாதாரண அஞ்சல்களும் கூட நல்ல கருப்பு மையால் (Black Ink)தான் எழுத வேண்டும். ஏனெனில் அனைத்தையுமே கோப்புகளில் பாதுகாத்து நமது இயக்க வரலாற்று மூலங்களாக (Historical Sources) ஆக்குகிறோம் நாம் என்பதைப் புரிந்து செயல்படுக! குருவாணை.

(5) தனிமரம் தோப்பாகாது. எனவே, தாங்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய சிலரின் கைரேகை, பிறப்பியல் (சாதகம்), வீட்டின் மண், குடும்பத்தார் பற்றிய விவரங்கள் முதலியவற்றை அனுப்பினால் அவர்களுக்கும் அருட்பட்டங்கள் வழங்கத் தயாராக இருக்கிறோம். அவர்கள் இடுப்பில் நாலு முழம் வேட்டி, ஆறு முழத் துண்டு, தலையில் பதினாறு முழத் தலைப்பாகை, குருதி வண்ணச் சிவப்பில் சன்னிதான உடையாக அணிந்து இடக்கையில் மெய்ஞ்ஞானக் கொடியும், வலக்கையில் மயில் தோகையும் வைத்து தங்களுடைய வீடுகளிலோ, யாக இடங்களிலோ, கோயில்களிலோ குறைந்தது 1¼ மணி நேரம் கூடுதல் 2½ மணி நேரம் அமர்ந்து தங்கள் தங்களின் அருட்பட்டங்களைக் கூறிப் பூசை செய்து பத்தி நிலைகளை, முத்தி நிலைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இதற்குரிய பூசாமொழி வாசகங்களை குருகுலத்திலிருந்து பெற்றுக் கொள்க. குருவழியாக தேவையான ஏட்டறிவும், பட்டறிவும் திட்டமிட்டபடி வழங்கப்படும். முயற்சிகளுக்கும், பயிற்சிகளுக்கும்

ஏற்ப அதில் பலன்கள் விளையும். உண்மையான ஆர்வமும், நம்பிக்கையும் உடையவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்கவும். எச்சரிக்கை, குருவாணை.

(6) நேற்று மகாத்மா காந்தி இறந்த நாள் ஆய்வுக் கூட்டமும், நான்காவது செயற்குழு கூட்டமும் சென்னையில் பிறரின் கண்காணிப்புகளுக்கு இடையில் திறம்பட பொது இடத்தில் நிகழ்த்தப் பட்டது. பன்னிரண்டு பேர்கள் கலந்து கொண்டார்கள். யாம் இல்லறம் ஏற்ற ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடப் பட்ட **"குருதேவர்"** என்ற மாத ஏடு ஒரு அறிக்கையாக வெளியிடுவது பற்றிய விவாதங்கள் நிகழ்ந்தன. தனிப் பிறதி விலை 0.75 காசு; ஆண்டுச் சந்தா ரூ.15. இது மாதம் இருமுறை வெளியிடுவது குறித்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. விரைந்து ஆயிரம் சந்தாக்களாவது தயாரிக்கப்பட்டே ஆக வேண்டும். தாங்களே சான்று நல்கி (Receipt Bill Book) ரூ.15/- ஆண்டுச் சந்தா வசூலித்து அவரவரின் முழு முகவரியை அதிலேயே எழுதி பதினைந்து நாட்களுக்குள் சில நூறு சந்தாக்கள் முகவரியையும், அதற்குரிய தொகையையும் நமது தலைமைப் பொறுப்பாளர் பிறம்மாச்சாரியார் அங்காள பரமேசுவரி சன்னிதானம் அவர்களுக்கு (No.56, N.G.O.Nagar, Ponneri-601204) அனுப்பி வைக்குமாறு குருவாணை வழங்கப் படுகின்றது.

இன்றுள்ள நாளேடுகளும், வார இதழ்களும், மாத மலர்களும் கட்டுப்பாடாக நம்மை இருட்டடிப்பு செய்து வருகின்றன. இதனை உடைத்து முகிலைக் கிழித்து வெளிவரும் முழு மதி போல் நாம் வளர இப்படியொரு ஏடு அவசியம்! அவசியம்! அவசியம்! இதன் வளர்ச்சிக்காக நன்கொடைகள் வாங்க முடியுமென்றாலும்

நல்லது. இப்பணியில் (பொருள் திரட்டல், சந்தாதாரர்கள் சேர்த்தல்) அருள்மிகு வனபத்திர காளி சன்னிதானம் அவர்களும், அருள்மிகு பன்ஞரி மாரியம்மன் சன்னிதானம் அவர்களும், மற்ற ஆதரவாளர்களும், ஆர்வலர்களும், சித்தரடியான்களும் ஈடுபட வேண்டுமென்பது திருக்களின் வாழ்த்து, தாத்தாக்கள் ஆத்தாக்களின் வாழ்த்து, உலக அருளாளர்களின் வாழ்த்தோடும், வேண்டுகோளாக விடுக்கப்படுகிறது. குருவாணை.

(7) அ.வி.தி.க்கு செயல்நிலை விளக்கம் ஒன்று தயாரிக்கப் பட்டு வருகிறது. அதனை அச்சிடுவதற்கும் உங்களைப் போன்ரேரின் ஆதரவுகள் எதிர்பார்க்கப் படுகின்றன. எனவே, அஞ்சல் வழியாக அருட்கணிப்பாக கைரேகை, பிறப்பியல், வீட்டு மண் முதலியவை அனுப்பிஞல் கணிப்புகள் விரைவில் அனுப்பப் படும். கவலை வேண்டாம். அத்துடன் தாங்கள் அ.வி.தி. இ.ம.இ. வளர்க்க உத்தரவும் அவசியம் தேவை என்று எழுதியிருப்பது வேடிக்கையாக உள்ளது. இரவு பகலாக அ.வி.தி.க்காகவும் இ.ம.இ.க்காகவும் செயல்படுகிருேம் யாம்; எனவே எமது ஆணையும், வாழ்த்தும், அருளுதவியும் எல்லா நொடிகளிலும் கிடைத்து கொண்டேயிருக்கும். புரிந்து செயல்படுக.

**<u>குறிப்பு</u>:-**

5வது முப்பெரு விழாவிற்கு முன்பிருந்தே; அதாவது உலக அருளாளர்கள், தாத்தாக்கள் ஆத்தாக்கள், திருக்கள் முதலியோர் பேரார்வம் கொண்டு எம்மை இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் என்று அறிவித்தது முதல் யாம் அன்ருடம் பகலில் 11-1½யும், இரவு 11-1½யும் தவருது நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்து ஆட்சி செய்கிருேம். எனவே,

மேற்குறிப்பிட்ட நேரங்களில் கண்ணுடி, குத்து விளக்கு, கலசம் வைத்து பூசை செய்கின்ற அனைவரும் தங்கள் தங்கள் முயற்சிகளின் உண்மைகளுக்கேற்ப சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் பெறுவர். இது குருவாணை. எனவே, நம்மவர்களில் சன்னிதானப் பட்டம் பெற்றவர்கள் அன்ருடம் பகலிலோ, இரவிலோ ஒரு மணி நேரமாவது கலசப் பூசை செய்தேயாக வேண்டும். இது கட்டாயம். எச்சரிக்கை.

அ.வி.தி. மூலம் அருள் வழங்கு பணியில் ஈடுபட்டுள்ள நம்மவர்கள் ஒவ்வொரு முறையும் 1¼ மணி நேரம் அல்லது 2½ மணி நேரம் தவ பூசையில் ஆழ்ந்து குருவழியாக திருக்களோடும், தாத்தாக்களோடும் ஆத்தாக்களோடும், உலக அருளாளர்களோடும் தொடர்பு கொண்டு சத்திகளை நிறையப் பெற்று அதன்பிறகே அருட்பணியில் ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால் இவர்களுடைய அருட்பணி முழுமையான வெற்றியினைப் பெருது. அது மட்டுமின்றி இவர்களிடம் உள்ள சத்திகள் குறைந்து முகப் பொலிவும், உடல் வலிவும், பிற நலன்களும் தேய்ந்து ஓய்ந்து மாய்ந்திட நேரும். அதனுல் இவர்கள் இழிவும், பழியும், நோயும் அடைய நேரிடும். இது கடுமையான எச்சரிக்கை.

எனவே, <u>ஒவ்வொரு பூசைக்கு முன்பும் தவபூசையில் ஈடுபட்டு தங்களுக்குள் அருளை ஏற்றிக் கொண்டுதான் செயல்பட வேண்டும்</u>. இல்லாவிட்டால் சித்தர் நெறிக்கும், குருதேவருக்கும், இயக்கத்துக்கும் பழி வந்து சேரும். எனவே, நமது அ.வி.தி. நிலையத்தில் உள்ள அனைவரும் யாகத்தை தவபூசையில் ஈடுபட்டவர்கள் மூலமே செய்ய வேண்டும்.

அதாவது **குருவாணையை மீறுகிறவர்களும் குற்றவாளிகள்; மீற உதவுபவர்களும் குற்றவாளிகள். எச்சரிக்கை**.

(8) ஐந்தாவது முப்பெரு விழா சென்னை பரங்கி மலைக்கருகில் உள்ள (St. Thomas Mount) புழுதிவாக்கம் என்ற கிராமத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. திருவில்லிபுத்தூர் செல்வதற்குரிய சூழ்நிலைகள் இன்னும் வளரவில்லை என்பதே இதற்குக் காரணம். நீங்கள் கோவை, பெரியார் மாவட்டங்களில் நமது இயக்கங்களை சரியாக வளர்க்காத காரணத்தினால்தான் அங்கு வர முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம் யாம். எனவே, எம்மை வரவேற்க விரைந்து செயல்படுங்கள்.

தாங்கள் தனிமனிதராக 27.1.84இல் அவிஞசி ஆலயத்திற்கு சன்னிதான உடையில் சென்று வழிபாடுகள் நிகழ்த்தியதை மிகப் பெரிய, அரிய, வரலாற்று சிறப்புமிக்க வீர நிகழ்ச்சியாகவே கருதுகிறோம் யாம். இதற்காக தங்களை இயக்கப்பூர்வமாகவும், எமது நெஞ்சப்பூர்வமாகவும் சிந்தை நிறைவோடு பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம் யாம். அடிக்கடி தங்களுக்கு அருள் வழங்குவோம். தாங்களோ தங்கள் வீட்டாரோ இது முதல் ஏற்படக்கூடிய அற்புதங்களை, மாயங்களை, பிற அருளுலக அநுபவங்களை உரிய பக்குவம் உள்ளவர்களுக்கு அல்லாமல் கூற வேண்டாம். எச்சரிக்கை. குருவாணை.

(9) தாங்கள் ஒருமுறை குறைந்தது ஒரு வார காலமாவது முன்னறிவிப்பு கொடுத்து அதன்பிறகு எம்மைக் காண வந்தால் Tape Recorder; ஒரு சில பயிற்சிகளும் உங்களுக்கு வழங்கப் படும்! வழங்கப் படும்!! வழங்கப் படும்!!! ஏனெனில், தாங்கள் திருச்சி ஓயாமெரி சுடலையில் செய்த பூசைகள் அனைத்தும்

மிகப் பெரிய வெற்றிகள் பெற்றிருக்கின்றன. மேலும் உங்களுடைய பெற்றோர்களின் ஊழ்வினை, வினை, ஆள்வினை, சூழ்வினை, விதி முதலிய அனைத்துமே மிகமிக சிறப்பாக இருக்கின்றன. உங்கள் குடும்பத்தார் அனைவருமே அருளாளர்களாக வரலாம்! புரிந்து செயல்படுக. குருவாணை.

(10) நம்மவர்களில் யாருமே **பிறரை தொட்டு அருள் வழங்கவே கூடாது**. இது அ.வி.தி.யின் சட்டம், கட்டுப்பாடு. பேய், பிசாசு என்பதற்காக அடிப்பதோ, தலைமுடியைப் பிடித்து ஆட்டுவதோ, பிறவாறு தொடுவதோ கடுமையாகக் கண்டிக்கப் படுகிறது. இக் குருவாணையை மறந்தும், துறந்தும், மீறியும், மாறியும், மறுத்தும், வெறுத்தும் (அலட்சியம் செய்தும்), பொறுப்பற்று ஒதுக்கியும் செயல்படுகிறவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் கடுமையான தண்டனைகளை கண்டிப்பாக அடைந்தே தீருவார்கள்.

நம்முடைய இயக்கத்தவர்களின் முன்னிலையில் நம்மைச் சேர்ந்தவர்களில் யாராக இருந்தாலும் சரி, பிறரை தொடுகிறார் என்றால் உடனே அதைத் தடுக்க வேண்டும். செயலை நிறுத்த வேண்டும். இப்படிச் செய்யாதவர்கள் குரு துரோகிகளாகவும், குரு விரோதிகளாகவும் கருதப்படுவார்கள். இக்கருத்தினை திருக்களின் ஒப்புதலாலும், தாத்தாக்கள் ஆத்தாக்களின் விருப்பங்களாலும், உலக அருளாளர்களின் முடிவுகளாலும்தான் குருவாணை விடுக்கிறோம்! விடுக்கிறோம்!! விடுக்கிறோம்!!! எச்சரிக்கை.

**குறிப்பு**:-

அருளாட்சிக்காக பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக இருக்கிற யாம் அருள் பட்டம் வழங்குவதற்காக எம்மிடம் அறிமுகப் படுத்தப் படுபவர்கள் சித்தர் நெறியை

முழுமையாகத் தெரிந்தவர்களாக, புரிந்தவர்களாக, நம்புபவர்களாக இருக்க வேண்டும். அதாவது **இரவில் (11-1½) விளக்கெண்ணெ விளக்கொளியில்தான் இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கப் படும். இதுவே அ.வி.தி.யின் சட்டம், திட்டம். எச்சரிக்கை!** அதாவது நாம் இந்துமத விரோதிகளை விட இந்துமதத் துரோகிகளையே உடனடியாக வென்றாக வேண்டும். இதற்கேற்பவே நேற்றைய செயற்குழுவில் சென்னையில் எல்லாவித சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும் நிறைவேற்றப் பட்டுள்ளன.

உடனடியாக இதற்குத் தொடர்ந்து போதுமென்று கூறும் வரை நகல்கள் அனுப்பிக் கொண்டேயிருங்கள். குருவாணை.

குருதேவர் சொல்ல எழுதியது:

அருள்மிகு அண்டபேரண்டமாளும் பழநியாண்டவர் சன்னிதானம் சித்தரடியான் பா.சுப்பையா. (No. 5, N.G.O.Nagar, Ponneri - 601204)

**இந்துமதத் தந்தை,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
31/1/84.

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

4.1.84

# செயல்நலம் பாராட்டு ஊக்கத் திருவோலையும் ஐந்தாவது முப்பெருவிழா அறிவிப்பு ஆணையும்

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! பல்வேறு அலுவல்களாலும், 'குருதேவர்' என்ற மாதமிருமுறை இதழ் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாலும் எமது நான்காம் முப்பெருவிழாவின் அருட்பணிகள் சிறக்க உயிராக இருந்த அருள்மிகு சிறுவாச்சியூர் காளியம்மன் சன்னிதானம் அவர்களின் துணைவி அருள்மிகு பதினறு திருக்கரம் கொண்டருளுதேவி பாரதகால வெல்போர்க் கொற்றவை சன்னிதானம் அவர்களுக்கும், அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சியம்மன் சன்னிதானம் அவர்கள் துணைவி அருள்மிகு திருப்பரங்குன்ற அன்னபூரண ஈசுவரி சன்னிதானம் அவர்களுக்கும், அருள்மிகு சித்தர்மகள் தேவி இராசராசேசுவரி சன்னிதானம் அவர்களுக்கும், மற்ற சத்தி நிலைப் பெண்டிர்களுக்கும் உடனடியாக நன்றி தெரிவித்துத் திருமடல் அனுப்ப இயலவில்லை. இந்த அஞ்சலைப் பல போட்டோ நகல்கள் எடுத்தாவது அல்லது கையெழுத்துப் பிறதி எடுத்தாவது சிறுமுகையூர், வேம்படிதாளம், காரைக்குடி, திருச்சி, இலால்குடி, காட்டூர், குலக்குடி, காரியேந்தல்பட்டி, மதுரை, திருவில்லிபுத்தூர் ... முதலிய வட்டார அடியான்களுக்கும், ஆர்வலர்களுக்கும் அனுப்புங்கள். இதுவே வெற்றிக் கனிகளை மேலும் மேலும் குவிக்கும்.

2) இம்மண்ணுலகில் பதினெண்சித்தர்கள்தான் ஆரம்பக் காலம் முதல் எண்ணற்ற மொழிகள், இலக்கியங்கள், கலைகள், அறிவியல்கள், சமுதாயக் கட்டமைப்புச் சட்டதிட்டங்கள், அரசியல் நெறிமுறை மரபுகள், தனிமனித வாழ்வியல் வகைகள், ... முதலியவைகளைப்

படைத்துக் கொடுத்து வருகிறார்கள். இப்பேருண்மைகளை வரலாற்றுப் பூர்வமாகத் தேவையான சான்றுகளோடும், ஊன்றுகளோடும், செயல்நிலை விளக்கங்களோடும் உலகுக்கு வழங்கும் ஒரு மாபெரும் சத்தியாகவே வாழுகிறோம் யாம். எனவேதான், யாம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் ... என்ற சாதனைமிகு அருட்பட்டங்களோடு குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் என்ற நிலையிலிருந்து செயல்பட்டும் கூட; உலக அருளாளர்கள் எமக்கு **இந்துமதத் தந்தை** என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

[ **19.12.83இல் உலக அருளாளர் அறிவிப்பு**:

(எண்ணூர்க் கடலருகில் இரயில் 15 மணித்துளிகள் நின்றபோது கிடைத்த விண்வெளி மின்னல் செய்தி - 19.12.83 மாலை 6.45 முதல் 7.00 மணியளவில்)

## இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார்.

அருட்பணி 23.12.83 முதல் 26.12.83 வரை மதுரை. ]

யாம் அதனை அமைதியோடும், அடக்கத்தோடும், நிதானத்தோடும், பொறுமையோடும், பொறுப்போடும் உரியவர்களுக்கு மட்டும் அறிவித்து "இந்த '**இந்துமதத் தந்தை**' [THE FATHER OF THE INDUISM] என்ற பட்டம் யாம், இந்துமதத்தைத் தோற்றுவித்த [The Founders Of The Induism] பதினெண்சித்தர்களின் நேரடியான விந்துவழி வாரிசு என்பதற்காகக் கொடுக்கப்பட்ட பட்டம்" என்றே கருதுகிறோம். எனவேதான், இதுகாறும் யாம் காற்றெனக் கடுகியும், புயலென விரைந்தும், சூறுவளியெனச் சுழன்றும், தீயென அனைத்தையும் உட்கொண்டு செறித்தும் தொகுத்து வைத்திருக்கும் ஏட்டறிவையும், பட்டறிவையும் மக்களுக்குக் கொடுப்பதில் கதிரவன் ஒளி போல் எங்கும் பரவிச் செயல்படுகிறோம். நீங்கள் எல்லோரும் எமக்குப் பேருதவி புரிய வேண்டும் என்று வேண்டுகிறோம்.

3) மதுரை மாநகர நான்காம் முப்பெருவிழாவின் வெற்றியினை அடுத்து உலக அருளாளர்கள் சதுரகிரி மலையில் தங்கி, திருவில்லிபுத்தூர் ஆண்டாள் சன்னிதானம் அமைக்கத் திருவுளம் கொண்டுள்ளார்கள். இதனை நன்கு புரிந்து நம்மவர்களில் ஒவ்வொருவரும் திருவில்லிபுத்தூரில் ஆண்டாள் சன்னிதானம் அமைக்கும் மாபெரும் முயற்சியில் ஈடுபட்டேயாக வேண்டும். இது திருக்களின் ஆணை, தாத்தாக்கள் ஆத்தாக்களின் ஆணை, உலக அருளாளர்களின் ஆணை. எமது குருவாணை. யாம், குறைந்தது 3 முதல் 5 பேர்களுடன்தான் திருவில்லிபுத்தூர் வருவோம். எனவே, 5 பேருக்குரிய பயணச் செலவும், மிக எளிமையான சாப்பாடும் இருந்தால் போதும். எமது வருகையால் திருவில்லிபுத்தூர் மக்களுக்குப் பல வகையான அருட்பயன்களும், உதவிகளும், பொருளுலக அறிவுரைகளும், குறைநீக்கங்களும் நிகழும் என்பதால்; உங்களில் சிலர் உடனே அந்த வட்டாரத்திற்குச் சென்று பலரின் உதவியைப் பெற்று ஒரு பொது இடத்தில் எமது அருட்பணி விரிவாக்கத் திட்டம் வெற்றி பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இவ்வஞ்சலைக் குருவாணையாகக் காட்டித் தேவையான நண்பர்களை அழைத்துச் செல்லுங்கள்.

**அன்பே சிவம்.**

**இந்துமதத் தந்தை,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
4/1/1984.

குருதேவர் சொல்ல எழுதியது:
குருவாணை அஞ்சல் ஓலைநாயகம் சித்தரடியார் ஏ.இரவி. 4/1/1984.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியார் ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. அஞ்சலின் இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இருந்தது.//**

## <u>தமிழிலக்கியங்களே இந்துவேதக் கருவூலங்கள்</u>

"... அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான்; இம்மண்ணுலகில் எழுதப்படுகின்ற இலக்கியங்கள் அனைத்துக்கும் வழிகாட்டியாக, அடிப்படைகளாக, நெறிகாட்டிகளாக, முறை விளக்கிகளாக, அண்டபேரண்டங்களில் வளரும், வளர்ந்திட்ட, வளர்ந்து கொண்டிருக்கின்ற, வளரப் போகின்ற முத்தமிழ் மொழியின் இலக்கியங்களின் தொகுப்புகளாக; மூன்று வகைப்பட்ட இலக்கியங்கள்;

(1) உலகியல் வாழ்வியல்களை, அதாவது பொருளியல் வாழ்வியல்களை விளக்குகின்ற இலக்கியங்கள் <u>மேல்கணக்கு இலக்கியங்கள்</u> என்றும்,

(2) பொருளியல் வாழ்வியலுக்குத் தேவையான நேம, நியம, நிடத, நிட்டை, நீதி, விதி முதலியவைகளை விளக்குகின்ற இலக்கியங்கள் <u>கீழ்க்கணக்கு இலக்கியங்கள்</u> என்றும்,

(3) அருளுலக வாழ்வியலுக்குத் தேவையான வேதத்தை விளக்குகின்ற இலக்கியங்களும், மதத்தை விளக்குகின்ற இலக்கியங்களும் <u>மையக்கணக்கு இலக்கியங்கள்</u> என்றும்;

மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு வகைக்கும் பதினெண்சித்தர்களை நினைவு கூர்ந்திடுவதற்காக; பரந்து விரிந்துபட்ட அண்டபேரண்ட அருளாட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியின் இலக்கிய பரப்புக்களிலிருந்து, குவியல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கியங்களின் தொகுப்பாக பதினெண் மேல்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பதினெண் மையக்கணக்கு நூல்கள் என்று மூன்று வகைப்பட்ட தொகை நூல்கள் தயாரிக்கப்பட்டு; முத்தமிழ்ச் சங்கத்தின் மூலம் இம்மண்ணுலகுக்கு வழங்கப்பட்டுள்ளன. ....."

**//குருதேவர் எழுதிய இந்துவேத நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை.//**

**"அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்"** -- குருபாரம்பரிய வாசகம்.



"... ... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** ஏறத்தாழ (256) இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் வாழ்ந்திட்டார். இவர் ஒன்பது பிற்காலச் சோழர் குல மன்னர்களுக்குக் குலகுருவாகவும்; அரசர் இல்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும், நாட்டின் பல பகுதிகளிலும் 'சிறு பள்ளி', 'பெரும் பள்ளி' என்ற கல்விக்கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார் ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com

www.books.gurudevar.org